# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

MSSRF
Science for Sustainable Development

| மாவட்டம் : | தேனி | காலம் : | 01/10/2022 | முதல் | 05/10/2022 |
|---|---|---|---|---|---|
| அறிக்கை எண் : | 078/ 2022 | வெளியீட்டு நாள் : | 30/09/2022 | | |

### தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35° - 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (25.09.2022 முதல் 29.09.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 05-10-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25/09 | 26/09 | 27/09 | 28/09 | 29/09 | தேதி | நாள்-4 01/10 | நாள்-4 02/10 | நாள்-4 03/10 | நாள்-4 04/10 | நாள்-5 05/10 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 2 | 34 | 6 | 6 | 8 |
| 37 | 38 | 35 | 37 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 36 | 35 | 36 | 36 |
| 24 | 25 | 25 | 25 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 26 | 25 | 26 | 26 |
| 3 | 8 | 3 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 8 | 6 | 8 | 8 |
| 54 | 74 | 57 | 59 | 74 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 60 | 60 | 60 | 60 | 70 |
| 39 | 56 | 47 | 45 | 46 | | 30 | 40 | 40 | 30 | 40 |
| 4 | 4 | 6 | 8 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 6 | 6 |
| கிழக்கு | வட மேற்கு | கிழக்கு | வட மேற்கு | கிழக்கு | **காற்றின் திசை** | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அக்டோபர் 1, 3, 4 தேதி லேசான மழையும், 2, 5 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25°-26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### கனமழை எச்சரிக்கை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அக்டோபர் 2ம் தேதி கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரிசெய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள்** : சுரைக்காய், பப்பாளி, கால்நடை.

சுரைக்காய்:

- சுரைக்காய் பயிரில் உரமிடுதல் மற்றும் பின்செய் நேர்த்தி முறைகளை கடைப்பிடிப்பது நல்ல பலன் அளிக்கும்.
- அடியுரமாக ஒவ்வொரு குழிக்கும் 6:12:12 என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக் கலவையை 100 கிராம் அளவுக்கு இட வேண்டும்.

பப்பாளி:

- பப்பாளி பழப் பயிரில் வெள்ளை ஈ கட்டுப்படுத்த செடியின் உயரத்திற்கேற்ப ஏக்கருக்கு 8 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி அட்டையினை கட்டி விடவும்

.கால்நடை:

- ஆடு வளர்க்கும் விவசாயிகள் ஆடுகள் மற்றும் குட்டிகளின் இறப்பை தவிர்க்க தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசியை பருவமழை காலத்திற்கு முன் போட்டுக் கொள்வது அவசியமாகும்.
- இதுவரை ஆடுகளுக்கு தடுப்பூசி போடாதவர்கள் அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசியை போட்டுக் கொள்ளவும்.